

# நத்தாரின் உண்மை தார்ப்பரியத்தை மீளவும் கண்டடைந்து அதனை அர்த்தமுள்ளதாகக் கொண்டாடுவோம்

**அர்த்தமுள்ளதொரு நத்தாரை நோக்கி...**
**எளிமையாக எமதாண்டவரை வழிபடுவோம்**

**சில ஆலோசனைகளும் விதப்புரைகளும்**



**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்**

நத்தாரை அர்த்தமுள்ளதாகக் கொண்டாடுவதை நோக்கிய முதற் படியொன்றாக, நாம் நத்தாரைக் கொண்டாடும் வழிகள் சிலவற்றை மீளவும் பரிசோதித்துப் பார்ப்பதுடன் எல்லா வகையான சமூகத் தீமைகளிலிருந்தும் விடுவிக்கப்பட்டு அனைவரும் காத்துக் கொள்ளப்படவும், வாழ்வைப் பூரணமாக அனுபவிக்கவும் நிலையான வாழ்விற்கான வாக்குறுதியைப் பெற்றுக்கொள்ளவும் வேண்டுமென்பதற்காக இயேசு கிறிஸ்துவில் இறைவன் மனித இயல்புடன் வடிவெடுத்த இந்தப் புனிதமான நிகழ்வின் உண்மையான அர்த்தத்தை மீளவும் பெற்றுக்கொள்வதற்கும் முயற்சிப்போம். அண்மைக்காலங்களில், நத்தார் பாரியளவில் வர்த்தகமயமாக்கப்பட்டு, அதன் மெய்ப்பொருள் மழுங்கடிக்கப்பட்டுள்ளது. ஆகவே, நத்தாரின் உண்மையான மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையும் மீளவும் கண்டடைவதற்கும் வழமையான கேளிக்கைகளைத் தவிர்ப்பதற்கும் எம்மை நாம் இயலச் செய்வதற்காக நாம் சில பிரயோக ரீதியிலான ஆலோசனைகளை இங்கு தருகின்றோம் (இணைப்பினைப் பார்க்க).

இந்த தாழ்மையான ஆலோசனைகளை முன்வைக்கும் அதேவேளை, நத்தாரின்போது சிறுவர்களிடையே எழும் எதிர்பார்ப்புகள் பற்றியும் நாம் அறிவோம். அவர்களின் மகிழ்ச்சியைப் பறிப்பதற்கு நாம் உத்தேசிக்கவில்லை, ஆயினும் அவர்களும் நிலையான மகிழ்வையும் சமாதானத்தையும் பெற்றுக்கொள்ளும் பொருட்டு, இந்த உன்னத நிகழ்வின் உண்மையான அர்த்தத்தை அனுபவிப்பதற்கு நத்தாரின் உண்மையான அர்த்தத்தை அவர்களும் மீளவும் கண்டடைவதற்கு விரும்புகின்றோம்.

- இக்காலத்தில் வலியுறுத்தப்படவேண்டிய சில அடிப்படை வேதாகம உண்மைகள்:

- எமது பாவங்களிலிருந்து எம்மை மீட்பதற்கும் எல்லா சமூகத் தீமைகளின் கட்டுக்களிலிருந்தும் எம்மை விடுவிப்பதற்கும் இயேசு வந்தார்.

- இயேசு மாட்டுத் தொழுவமொன்றில் பிறந்தார். அவருக்கு சத்திரத்தில் இடம் கிடைக்கவில்லை.

- இயேசு எல்லா வல்லமையயும் அதிகாரங்களிலிருந்தும் தன்னை வெறுமையாக்கி அடிமையின் வடிவெடுத்த இறைவனாவர்.

- இயேசு அரசியல் கையாடலிலிருந்து தப்பியோடிய ஓர் அகதிக் குழந்தையாவர்

இந்நேரத்தில் நாம் மீளவும் கண்டடைய வேண்டிய சில பிரதான வேதாகமப் பகுதிகள் மற்றும் கருப்பொருள்கள் மற்றும் எமது பிரதிபலிப்பின் கவனம் என்பவை பின்வருமாறு சுருக்கமாக கூறப்படலாம்:

| | |
|---|---|
| லூக்கா 1:46-55 | அவர் தம்முடைய அடிமையின் தாழ்மையை நோக்கிப் பார்த்தார்.... வல்லமையுடையவர் மகிமையானவைகளைச் செய்தார், தாழ்மையானவர்களை உயர்த்தினார். |

| | |
|---|---|
| மத்தேயு 2:21-23 | கலிலேயா நாட்டின் புறங்களிலே விலகிப்போய், நாசரேத்து என்னும் ஊரிலே வந்து வாசம் பண்ணினான். |
| லூக்கா 2:6-7 | பிள்ளையைத் துணிகளில் சுற்றி முன்னணையில் கிடத்தினாள். |
| மத்தேயு 2:13-15 | அவன் எழுந்து இரவிலே பிள்ளையையும் அதின் தாயையும் கூட்டி க்கொண்டு எகிப்தி-ற்குப் புறப்பட்டுப் போய்.... |
| யோவான் 3:16 | தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனை தந்தருளி.... இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார். |
| பிலிப்பியர் 2:5-11 | தம்மைத்தாமே வெறுமையாக்கி, அடிமையின் ரூபமெடுத்து.... |
| வெளிப்படுத்தல் 22:13-17 | பிரகாசமுள்ள விடிவெள்ளி நட்சத்திரம்-ஜீவத்தண்ணீரை இலவசமாய் |

நத்தாரின் அர்த்தத்தை மீளவும் கண்டடைந்து எமது கொண்டாட்டங்களைத் தகுந்ததாக்கிக்கொள்வதற்கு எம்மை இயலச் செய்யும் சில பிரயோக ரீதியிலான ஆலோசனைகள் பின்வருமாறு:

A. திருச்சபைகளுக்கு

- எமது ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிறப்பினை மாத்திரமல்லாது அவரது மறு வருகையையும் பிரதிபலிப்பதுடன், வருகையின் காலத்-தினுள் ஜெபத்துடன் பிரவேசிப்பதற்காக நவம்பர் மாதத்தில் (போயா தினம் விரும்பத்தக்கது) ஜெப தினம் ஒன்றை ஏற்படுத்தல். வருகையின் காலம் என்பது நாம் உதித்த கிறிஸ்துவை மாத்திரமன்றி நாம் எதிர்நோக்கிக் காத்திருக்கும் அவரது இறுதி வருகையையும் கொண்டாடும் காலமாகும்.

- நவம்பர் மாதத்தில், எளிமை, ஜெபம் மற்றும் வழிபாடு ஆகியவற்றை வலியுறுத்தல் (மேய்ப்பர்களும் அரசர்களும் குழந்தையை வழிபட்டனர்) அத்துடன் சமாதானத்தின் பிரபுவைக் கொண்டாடுதல் ஆகியவற்றை நத்தார் நிகழ்வின் அவசியமான அம்சங்களாகக் கொண்டு ஆகக்குறைந்தது இரண்டு அருளுரைகளை மேற்கொள்ளல்.

- தேவையற்ற கேளிக்கைகள், ஆடம்பர ஹோட்டல்களில் இரவுணவு மற்றும் நடனங்கள், வேடிக்கை நிகழ்வுகள் போன்றவற்றைத் தவிர்க்குமாறு உங்கள் உறுப்பினர்களுக்கு அறிவூட்டல் மற்றும் அவர்களை ஊக்குவித்தல்

- மதுப்பாவனையையை தவிர்ப்பதற்கு உங்களது உறுப்பினர்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தல்.

- நத்தார் என்பது பொருட்கள் வாங்குவதற்கு மாத்திரமானது அல்ல என்பதை விளக்குதல்.

- திருச் சபைச் சமூகமாக, திருச்சபை வளாகத்தில் அல்லது பொதுப் பிரதேசங்களில் 05 மரங்களையேனும் நட்டு, எதிர்வரும் வருடம் முழுவதுமாக அவற்றைப் பாதுகாத்துப் பராமரித்தல்.

- துப்புரவுப் பணிகள் அல்லது வீதிகளை சுத்தம் செய்தல், குப்பை-களை அகற்றுதல் போன்ற பணிகளில் ஈடுபடுவோரை உங்களின் நத்தார் நிகழ்ச்சிகளில் ஒன்றிணைத்து இக்காலத்தின் மகிழ்ச்சியையும் சந்தோஷத்தையம் அவர்களுடன் பகிர்ந்து கொள்வதற்கான சாத்திய-த்தை ஆராய்தல்.

- உங்கள் ஆராதனையில் இயலாமைகளுடன் வாழ்வோரை ஒன்ற-ிணைப்பதோடு நத்தாரின்போது அவர்களிடத்தில் போதிய கவனம் செலுத்துதல்.

- அகதிக் குழந்தையான இயேசுவை மையமாகக் கொண்டு, அகதிகள், இடம் பெயர்ந்து வாழ்வோர் போன்றோருக்கு ஜெபத்துடனான ஆதரவை வழங்குதல்.

B. குடும்பங்களுக்கு

- நவம்பர் மாதத்தின் இறுதிப்பகுதியில் அல்லது டிசம்பர் மாதத்தின் ஆரம்பத்தில் குடும்பமாக ஒன்றிணைந்து உணவருந்துதல். அப்போது, குடும்பத்தின் தலைவர் நத்தாரினதும் வருகையினதும் உண்மையான அர்த்தத்தைக் குடும்பத்தவர்களுக்கு விளக்குவார் (பாஸ்கா உணவின் மரபைப் பின்பற்றுதல்).

- இக்காலத்தில் வயது முதிர்ந்தோரை பார்வையிட செல்வதுடன் உங்கள் குடும்பத்துடன் நேரம் செலவிடும்படி அவர்களை அழையு-ங்கள்.

- ஆடம்பர விருந்துபசாரங்கள், ஹோட்டல்களிலும் கிளப்களிலும் இரவுணவு நடனங்கள் போன்றவற்றிற்கு மறுப்புத் தெரிவியுங்கள்.

- உங்கள் நத்தார் கேக்கினைத் தயார் செய்யும் முன்னர் மீளவும் சிந்தியுங்கள்.

- உங்கள் குழந்தைகளுக்கு புதிய உடைகளையும் விளையாட்டுப் பொருட்களையும் வாங்குங்கள், ஆனால் எளிமை மற்றும் பகிர்தலின் முக்கியத்துவத்தை எப்போதும் அவர்களுக்கு விளக்குங்கள்.

- உங்கள் அருகாமையிலுள்ள ஏழைப் பிள்ளையொன்றின் தேவையை நிவர்த்தி செய்யும் பொருட்டு, டிசம்பர் மாதத்தில் ஒவ்வொரு நாளும் ஆகக்குறைந்தது 10 ருபாவையேனும் சேமிப்பதற்கு பிள்ளைகளை ஊக்குவியுங்கள்.

- இயலாமைகளுடன் வாழ்வோரில் விசேட கவனம் செலுத்தி உங்களது குடும்ப வாழ்வில் அவர்களை சிறப்பாக ஒன்றிணையுங்கள்.

- உங்கள் வளவினுள் அல்லது அருகாமையில் மரமொன்றை நட்டுப் பராமரியுங்கள்.

- உங்கள் பெற்றோரின் பெற்றோர், வயது முதிர்ந்தோர் மற்றும் ஏனைய வயது முதிர்ந்த நண்பர்கள் ஆகியோரின் நத்தாரை அவர்களுக்கு மறக்கமுடியாத நாளாக மாற்றுவதற்கு நத்தார் தினத்தன்று உங்கள் வீட்டிற்கு அவர்களை அழைப்பதற்கு மறக்காதீர்கள்.

- நத்தாருக்காக மதுப் பாவனையைத் தவிருங்கள்.

C. ஓய்வுநாட் பாடசாலைகள்

- சிறுவர்களின் மகிழ்ச்சியையும் எதிர்பார்ப்புகளையும் உடனடியாக நிறுத்திவிடாதீர்கள், ஆனால் ஓய்வுநாட் பாடசாலைப் பிள்ளைகளுக்கு, நத்தார் தாத்தா பற்றிய உண்மைகளையும் (உண்மையில் புனிதர் நிக்கோலஸ் தன்னை அடையாளம் காட்டாது ஏழைகளுக்கும் தேவையுடையோருக்கும் உதவிய புனிதர்) தேவையுடையோருக்கும் ஏழைகளுக்கும் உதவ வேண்டியதன் அவசியத்தையும் விளக்கும் ஒரு நிகழ்வொன்றை ஏற்பாடு செய்யுங்கள்.

- ஓய்வுநாட் பாடசாலை விருந்துபசாரங்களை ஊக்கமுடையதாகவும் மகிழ்வானதாகவும் ஆக்குங்கள், அத்துடன் அவற்றின் உண்மையான அர்த்தத்தையும் வெளிப்படுத்துவதுடன் அருகாமையில் வசிக்கும் பிள்ளைகள் சிலரையும் சேர்த்துக்கொள்ளுங்கள்.

- நத்தாரின்போது அவர்களை விடவும் வசதிகள் குறைவாகவுள்ள நண்பர்களுக்கு உதவுவதற்கு அவர்களை ஊக்குவியுங்கள்.

D. நத்தார் அலங்காரங்கள்

- பொலித்தீன் பாவனையைத் தவிருங்கள்.

- நத்தார் மரம் அத்தியாவசியமானது அல்ல. உங்களுக்கு ஒன்று தேவையாயின், இயற்கையான மரமொன்றை அலங்கரியுங்கள். கிளைகளை வெட்ட வேண்டாம் அல்லது செயற்கை மரங்களைப் பயன்படுத்த வேண்டாம்.

E. ஒன்லைன் மனு

- நத்தாரை எளிமையாகவும் ஆன்மீக ரீதியாக வழிகாட்டும் வகைக-ளிலும் கொண்டாடுவதற்கு உதவும் விதத்தில் இந்த பரப்புரையில் இணையுமாறு அரசையும் வியாபார நிறுவனங்களையும் கோருகின்ற ஒன்லைன் மனுவொன்றில் விசுவாசிகள் கையெழுத்திட ஊக்குவ-ியுங்கள்.

- ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் பிரசன்னத்தில் நாம் உண்மையாக அனுபவிக்கும் அர்த்தமுள்ள, மகிழ்வான காலமொன்றாக நத்தாரை மாற்றுவதற்கு நீங்கள் உங்கள் முழுமையான ஒத்துழைப்பினை வழங்குவீர்களென நாம் நம்புகின்றோம்.

**இலங்கை தேசிய கிறிஸ்தவ மன்றம்**
**இல 368/6, பௌத்தாலோக மாவத்தை,**
**கொழும்பு 7**

Tel: 0112671723
Fax: 0112671721
Email: info@nccsl.org